# இராணிப்பேட்டை நகராட்சி

## 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

**தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 10.09.2018 | **பொருள் எண். 2943**<br><br>அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018 ஆகியவற்றில் 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018-ல் சொத்து வரி பொது சீராய்வு தொடர்பான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் வழிகாட்டுதல்களில் கீழ்கண்டுள்ளவாறு சொத்து வரி உயர்வு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. | நகரமன்றத் திர்மானம் எண்.2943<br>1,2,3,4அனுமதிக்கப்படுகிறது |

| வ. எண். | கட்டிடப் பயன்பாடு விபரம் | 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி உயர்வு செய்யப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|---|
| 1. | குடியிருப்பு கட்டிடங்கள் (உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்புகள்) | 50 சதவீதத்திற்கு மிகாமல் |
| 2. | குடியிருப்பு அல்லாத அனைத்து கட்டிடங்கள் | 100 சதவீதத்திற்கு மிகாமல் |

மேலும் நகராட்சிப் பகுதியிலுள்ள தெருக்கள் / சாலைகள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரித்து அவற்றிற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு உயர்வு செய்யவும், அதனடிப்படையில் சொத்து வரி சீராய்வு செய்யவும் மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி, இராணிப்பேட்டை நகராட்சி பகுதிகளிலுள்ள 122 தெருக்கள் A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாக பிரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், A, B மற்றும் C ஆகிய மூன்று மண்டலங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் உள்ள கட்டிடங்களுக்கு ஒரு சதுர அடிக்கு கீழ்கண்டுள்ளவாறு அடிப்படை மதிப்பு உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | மண்டலம் | தெருக்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள அடிப்படை மதிப்பு (ரூ./ சதுர அடி) | உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள அடிப்படை மதிப்பு (ரூ./ சதுர அடி) |
|---|---|---|---|---|
| 1 | A | 18 | 2.10 | 3.15 |
| 2 | B | 84 | 2.05 | 3.05 |
| 3 | C | 20 | 2.00 | 2.50 |

அரசாணை எண். 73 மற்றும் 76, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.20555/2018/ஆர்1, நாள்.20.08.2018 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்படி 01.04.2018ம் தேதி முதல் இராணிப்பேட்டை நகராட்சி பகுதிகளிலுள்ள அனைத்து கட்டிடங்கள் பொது சொத்து வரி சீராய்வு செய்திடவும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சி பகுதியிலுள்ள சாலைகள்/ தெருக்கள் A, B மற்றும்

| | | |
|---|---|---|
| | C என மூன்று மண்டலங்களாக வகைப்படுத்தி ஒவ்வொரு மண்டலத்திற்கும் அடிப்படை மதிப்பு (Zone Value) நிர்ணயம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>***அலுவலக குறிப்பு :-***<br><br>1. அரசு ஆணைகள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சுற்றறிக்கையில் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் படி 01.04.2018ம் தேதி முதல் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்திட அனுமதிக்கலாம்.<br><br>2. இராணிப்பேட்டை நகராட்சியில் உள்ள 122 சாலைகள் / தெருக்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>*3.* *அ) மண்டலம்* A-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.2.10-லிருந்து ரூ.3.15 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>*ஆ) மண்டலம்* B-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.2.05 லிருந்து ரூ.3.05 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>*இ) மண்டலம்* C-யில் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள் மற்றும் தெருக்களுக்கான அடிப்படை மதிப்பு சதுர அடி ஒன்றிற்கு ரூ.2.00 லிருந்து ரூ.2.50 ஆக உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| | *4. மேற்கண்டவாறு* A, B மற்றும் C என மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அம்மண்டலங்களுக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ள சாலைகள்/ தெருக்களில் புதியதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு உயர்வு செய்யப்பட்டுள்ள அடிப்படை மதிப்பின்படி சொத்து வரி நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண்.1945/2018/அ1).** | |
| | **2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்** | |
| 28.09.2018 | **பொருள் எண். 2944**<br><br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செப்டம்பர் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 1308/2015/சி1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2944 அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **பொருள் எண். 2945**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2018 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :-**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண். 675/2015/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2945 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | | |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2946</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 சீனிவாசன்பேட்டை ஸ்கூல் தெருவில் உள்ள சிறுபாலத்திற்கு சாய்வுதளம் (Ramp) அமைத்திடவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.50,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 2310/2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2946 அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2947</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.27 துரைசாமி மனைப்பிரிவு பகுதியில் பொதுமக்களின் குடிநீர் தேவைக்கென ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்ப் அமைத்திடும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1,50,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 2309/2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2947 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 28.09.2018 | <u>**பொருள் எண். 2948**</u><br>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019–ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கென ரூ.18,00,000/– மதிப்பீட்டில் 10 எண்ணிக்கை Battery Operated Vehicle சப்ளை செய்திடும் பணிக்கான மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி செய்தித்தாளில் விளம்பரம் செய்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :-**</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழோ (அ) திட்டப்பணிகளுக்கென அரசு ஒதுக்கீடு செய்திடும் நிதியின் கீழோ மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1258/2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2948 அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | <u>**பொருள் எண். 2949**</u><br>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19–ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கென ரூ.136.00 இலட்சம் மதிப்பீட்டில் Bio Mining பணிக்கான மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்வதற்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :-**</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை விளம்பரம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழோ (அ) திட்டப்பணிகளுக்கென அரசு ஒதுக்கீடு செய்திடும் நிதியின் கீழோ மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1059/2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2949 அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2950</u>**<br>இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திருமதி.பி.பவுன், கடந்த 18.05.2018 அன்று பணியிடை காலத்தில் காலமாகிவிட்டார். அன்னாரின் வாரிசுதாரரும் கணவருமாகிய திரு.வி.பழனி என்பவர் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். பணியிடை காலத்தில் மரணமடைந்த துப்புரவு பணியாளர் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்கான வட்டி ரூ.9564/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.12524/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2221/2018/பி2)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.2950<br>அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2951</u>**<br>இந்நகராட்சியில் பம்புசெட்காவலராக பணிபுரிந்த திரு.பி.இராதாகிருஷ்ணன் என்பவர் கடந்த 31.03.2018 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திரு.பி.இராதாகிருஷ்ணன், பம்புசெட்காவலர் அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டி ரூ.1389/- மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.14349/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2358/2018/பி2)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.2951<br>அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2952</u>**<br>இந்நகராட்சியில் மகப்பேறு ஆயாவாக பணிபுரிந்த திருமதி.எஸ்.உஷா, என்பவர் கடந்த 30.06.2018 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டார். அன்னாரின் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். திருமதி.எஸ்.உஷா, மகப்பேறு ஆயா அவர்களின் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்குண்டான வட்டி ரூ.5904/- மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.10,000/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.18864/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | நகரமன்றத் திர்மானம்<br>எண்.2952<br>அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | **(ந.க.எண்.2222/2018/பி2)** | |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2953</u>**<br>இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திரு.பி.இராஜேந்திரன் கடந்த 16.05.2018 அன்று பணியிடை காலத்தில் காலமாகிவிட்டார். அன்னாரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.ரா.லூர்துமேரி என்பவர் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். பணியிடை காலத்தில் மரணமடைந்த துப்புரவு பணியாளர் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்கான வட்டி ரூ.8681/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.11641/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2219/2018/பி2)** | நகரமன்றத் திர்மானம் **எண்.2953** அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2954</u>**<br>இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்த திரு.எஸ்.ஆனந்தன், கடந்த 02.05.2018 அன்று பணியிடை காலத்தில் காலமாகிவிட்டார். அன்னாரின் வாரிசுதாரரும் மனைவியுமாகிய திருமதி.எ.கற்பகம் என்பவர் சிறப்பு சேமநல நிதி தொகை வட்டியுடன் வழங்குமாறு தனது மனுவில் கோரியுள்ளார். பணியிடை காலத்தில் மரணமடைந்த துப்புரவு பணியாளர் சிறப்பு சேமநலநிதி தொகையில் ரூ.2960/-ம் அதற்கான வட்டி ரூ.8604/-ஐ பொதுநிதியிலும் ஆக மொத்தம் ரூ.11564/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2220/2018/பி2)** | நகரமன்றத் திர்மானம் **எண்.2954** அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2955</u>**<br>இந்நகராட்சியில் Day –NULM- Shelter For Urban Homeless திட்டத்தின் கீழ் ரூ**34.00** இலட்சம் மதிப்பீட்டில் வாரச்சந்தை பகுதியில் இராணிப்பேட்டை, ஆற்காடு மற்றும் வாலாஜாபேட்டை ஆகிய **3** நகராட்சிகளுக்கும் சேர்த்து (Shelter For Urban Homeless) ஒருங்கிணைந்த காப்பகம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**19645/2016**/UFA1 நாள் **04.01.2018–**ல் அனுமதியளித்துள்ளதின் பேரில் மேற்படி பணிக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் **24.08.2018** அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதியை பெறுவதால் (Techinical Bid) 27.08.2018 அன்று திறக்கப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Price Bid) விவரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும், | நகரமன்றத் திர்மானம் **எண்.2955** அனுமதிக்கப்படுகிறது |

<table>
<tr>
<td></td>
<td>
முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>1)</td><td>திருவாளர் KSN கன்ஸ்ட்ரக்சன் , 34, முதல் தெரு, ஆசிரியர் காலனி, குடியாத்தம்</td><td>4.85% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
<tr><td>2)</td><td>திரு.R. சுரேஷ்மணி, 90, காந்தி ரோடு, குடியாத்தம்</td><td>7.83% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>
2) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திருவாளர் KSN Construction ஒப்பந்ததாரர் அவர்களின் மதிப்பீட்டை விட 4.85% அதிகமான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு வேலை உத்திரவு வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 4030/2016/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.09.2018</td>
<td>
<u>பொருள் எண். 2956</u><br>
இந்நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஆயுர்வேத மருத்துவனை ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 2018–2019 ஆம் ஆண்டுக்கான சீருடை வழங்கவும், மேலும், துப்புரவு பணியாளர்களுக்கு காலணிகள் மற்றும் சீருடைக்கான தையல் கூலி வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ. 4.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :-</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்<br>
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
3) மேற்படி பணிக்காகும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 2463/2018/எச்1)
</td>
<td>நகரமன்றத் திர்மானம் எண்.2956 அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2957</u>**<br>சென்னை உயர்நீதிமன்ற அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.பி.எஸ்.சிவசண்முகசுந்தரம் அவர்களின் 04.09.2018 ஆம் தேதிய கடிதத்தில் இந்நகராட்சிக்கு எதிராக திரு.எ.சிவக்குமார் பொருத்துநர் (தற்காலிக பணி நீக்கம்) என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு W.P. No. 10371/2018–ன் தீர்ப்புரை நாள் 07.06.2018 குறித்து சட்டக்கருத்துரு வழங்கியமைக்காக வழக்கு கட்டணமாக ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும் ) வழங்க கோரியுள்ளார். அதன்படி அன்னாருக்கு வழக்கு கட்டணமாக ரூ.5000/–(ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்க பொருள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) ரூ.5000/– வழக்கு கட்டண செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.3149/2016/சி1)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.2957<br>அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2958</u>**<br>இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதியிலுள்ள பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு வழங்கப்படும் குடிநீரில் போதிய அளவில் குளோரினேஷன் இருக்கும் பொருட்டு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைடு திரவம் வாங்கி உபயோகத்திடவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.9,80,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். /2018/இ1)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.2958<br>அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2959</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 22 நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான கெல்லீஸ் சாலையினை விரிவாக்கம் செய்திடும் பணி நடைபெறுவதால் மேற்படி சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான 13 எண்ணிக்கை தெருவிளக்கு மின்கம்பங்களை அகற்றி சாலையின் ஓரத்தில் அமைத்திடுமாறு உதவிபொறியாளர் நெடுஞ்சாலை க(ம) ப பிரிவு, வாலாஜா அவர்களின் கடிதம் கோ.எண். 7/2018–19/உபொ/ நாள் 04.07.2018–ல் கோரியுள்ளதின் பேரில் மேற்படி மின்கம்பங்களை மாற்றி அமைத்திடவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.22,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து உரிய விலைப்புள்ளிகள் பெற்று பணியினை விரைந்து முடித்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண். 1384 /2018/இ1)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.2959<br>அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2960</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் ( 30 இடங்களில்) குறைந்த விலையில் பொதுமக்களுக்கு தரமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணிக்கான இயந்திரம் சப்ளை செய்திடும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை நாளிதழில் விளம்பரம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2355 /2018/இ1)** | நகரமன்றத் திர்மானம்<br>எண்.2960<br>அனுமதிக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| | | |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2961</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN73D8588 எண்கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்தின் பின்பக்க டயர்கள் இரண்டும் தேய்ந்துவிட்டதால் புதியதாக இரண்டு டயர்கள் மாற்றவும் பணியினை மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.30,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி இந்நகராட்சி ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2121/2018/எச்1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2961 அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2962</u>**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TN73D8573 எண்கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்தின் பின்பக்க டயர்கள் இரண்டும் பழுதடைந்துவிட்டதால் புதியதாக இரண்டு டயர்கள் மாற்றவும் பணியினை மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.30,000/-க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி இந்நகராட்சி ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொடர்நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2497/2018/எச்1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2962 அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **<u>பொருள் எண். 2963</u>**<br>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கிவரும் TN73D8588 எண்கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பழுதடைந்த இரண்டு பின்பக்க டயர்கள் புதியதாக வாங்கி பொருத்துவதற்கு நகரமன்ற தீர்மானம் எண்.2961 நாள்: 28.09.2018 அனுமதி அளித்ததின்பேரில் 23.08.2018 ஆம் தேதி அன்று | நகரமன்றத் திர்மானம் எண்.2963 அனுமதிக்கப்படுகிறது |

கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனம் மற்றும் முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | A.V.TYRES MRF TYRES AND SERVICE<br>No.36,D/1, M.B.T. Road, Muthukadai, Ranipet | ரூ.20,250/- |
| 2. | Sri Balaji Agencies<br>No.122/B5 M.B.T. Road, Muthukadai, Ranipet | ரூ.22,000/- |

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை 1-ல் A.V.TYRES MRF TYRES AND SERVICE அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

3. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2121/2018/எச்1)**

28.09.2018

**பொருள் எண். 2964**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கிவரும் TN73D8573 எண்கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பழுதடைந்த இரண்டு முன்பக்க டயர்கள் புதியதாக வாங்கி பொருத்துவதற்கு நகரமன்ற தீர்மானம் எண்.2962 நாள்: 28.09.2018 அனுமதி அளித்ததின்பேரில் 24.09.2018 ஆம் தேதி அன்று கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | நிறுவனம் மற்றும் முகவரி | விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | A.V.TYRES MRF TYRES AND SERVICE<br>No.36,D/1, M.B.T. Road, Muthukadai, Ranipet | ரூ.17,800/- |

நகரமன்றத் திர்மானம் எண்.2964 அனுமதிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| | <table><tr><td>2.</td><td>BALAMURUGAN TYRES<br>No.136E/2, M.B.T. Road, Navalpur, Ranipet</td><td>ரூ.20,800/-</td></tr></table><br>**அலுவலக குறிப்பு:-**<br>1.மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2. மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் வரிசை 1-ல் A.V.TYRES MRF TYRES AND SERVICE அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2497/2018/எச்1)** | |
| 28.09.2018 | **பொருள் எண். 2965**<br>இந்நகராட்சி மூலம் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019–ன் கீழ் திடக்கழிவு மேல்ாண்மை பணிகளான Micro Compost மையங்கள் அமைத்திடும் ரூ. 145.00 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிடும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை மாநில அளவில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கம் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை செய்தித்தாளில் விளம்பரம் செய்திட நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியின் கீழோ (அ) திட்டப்பணிகளுக்கென ஒதுக்கப்படும் நிதியின் கீழோ மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**(ந.க.எண்.922 /2018/இ1)** | நகரமன்றத் திர்மானம் எண்.2965 அனுமதிக்கப்படுகிறது |
| 28.09.2018 | **பொருள் எண். 2966**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை உரக்கிடங்கில் சேர்த்து தனியார் மூலம் முறைப்படி பிரித்து உரம் தயாரித்தல் பராமரித்தல் போன்ற திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் 10 | நகரமன்றத் திர்மானம் எண்.2966 அனுமதிக்கப்படுகிறது |

நபர்களை சப்ளை செய்திடும் பணிக்கு (Out Sourcring) இந்நகர மன்ற தீர்மானம் எண்.2806 நாள்:28.03.2018-ல் அனுமதி அளித்துள்ளதின்பேரில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் (Offline) கோரியதில் 24.08.2018 அன்று வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | சதவிகிதம் % |
|---|---|---|
| 1 | தி வாலாஜாபேட்டை அக்ரோ,<br>இன்ஜினியர் & சர்வீஸ் கோ-ஆப், சென்டர் லிமிடெட் VV2664 | ரு.392.06/- |
| 2 | எஸ்.பி & கோ<br>எண்.1, இ.எஸ்.ஐ.நகர்,<br>ஆகாரம் மெயின் ரோடு, திருவன்சேரி. சென்னை -73 | ரு.396.58/- |
| 3 | கிரீன்வாரியர்<br>எண்.14, 4வது தெரு, கே.கே.நகர்,<br>மனவாளநகர், திருவள்ளூர். 602 002 | ரு.409/- |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளல் வரிசை எண்.1-ல் கண்டுள்ள தி வாலாஜாபேட்டை அக்ரோ, அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களன் முன்அனுமதி பெற்று

<table>
<tr><td></td><td>மேற்படி பணிக்கு உரிய ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2293/2016/எச்1)</td><td></td></tr>
<tr><td>28.09.2018</td><td><u>பொருள் எண். 2967</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின்விசை பம்புகளை குடிநீர் நிதியின் கீழ் ரூ.5,50,000/– மதிப்பீட்டில் பராமரித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2859 நாள் 30.05.2018–ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.09.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. டி. அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.எழில்வாணன், ஒப்பந்ததாரர்</td><td>1.00% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ள திரு.டி. அருணகிரி, ஒப்பந்ததாரர் அவர்களின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br><u>(ந.க.எண்.1484/2018/இ1)</u></td><td>நகரமன்றத் திர்மானம் எண்.2967 அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td>28.09.2018</td><td><u>பொருள் எண். 2968</u><br>வாரச்சந்தை பகுதியில் உள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 14.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் நிதியின் கீழ் ரூ.50,000/– மதிப்பீட்டில் புதிய பைப் லைன் அமைக்கும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2882 நாள் 29.06.2018–ல் அனுமதியளிக்கப்பட்டதில் மேற்படி பணிக்கு</td><td>நகரமன்றத் திர்மானம் எண்.2968 அனுமதிக்கப்படுகிறது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.09.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. டி. அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.எழில்வாணன், ஒப்பந்ததாரர்</td><td>1.50% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ளவரின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>(ந.க.எண். 1605/2018/இ1)</u></td>
<td></td>
</tr>
<tr>
<td>28.09.2018</td>
<td><u>பொருள் எண். 2969</u><br>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10 சீனிவாசன்பேட்டை மற்றும் முக்கியம்மன் கோயில் தெரு பகுதிகளுக்கு குடிநீர் நிதியின் கீழ் ரூ.55,000/– மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2844 நாள் 30.05.2018–ல் அனுமதியளிக்கப்பட்டதில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.09.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திருவாளர் .பி.வி. எண்டர்பிரைசஸ்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. டி. இராமமூர்த்தி, ஒப்பந்ததாரர்</td><td>2.50% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table></td>
<td>நகரமன்றத் திர்மானம் எண்.2969 அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ளவரின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>
<u>(ந.க.எண். 1383/2018/இ1)</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.09.2018</td>
<td>
<u>பொருள் எண். 2970</u><br>
இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் விநியோக பகிர்மான பைப்புகளில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் நிதியின் கீழ் ரூ.3,00,000/– மதிப்பீட்டில் சரி செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2903 நாள் 29.06.2018–ல் அனுமதியளிக்கப்பட்டதில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.09.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு. டி. அருணகிரி, ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.எழில்வாணன், ஒப்பந்ததாரர்</td><td>2.00% மதிப்பீட்டை விட அதிகம்.</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ளவரின் மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
<u>(ந.க.எண்.1972/2018/இ1)</u>
</td>
<td>நகரமன்றத் திர்மானம் எண்.2970 அனுமதிக்கப்படுகிறது</td>
</tr>
</table>

28.09.2018

**பொருள் எண். 2971**

இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு செல்லும் பிரதான பம்பிங் மெயின் பைப்புகளில் ஏற்படும் உடைப்புகளை குடிநீர் நிதியின் கீழ் ரூ.1,00,000/– மதிப்பீட்டில் சரி செய்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 2899 நாள் 29.06.2018–ல் அனுமதியளிக்கப்பட்டதில் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.09.2018 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு. டி. அருணகிரி, ஒப்பந்ததாரர் | 0.25% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எஸ்.எழில்வாணன், ஒப்பந்ததாரர் | 1.50% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்டவாறு வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் கண்டுள்ளவரின் மதிப்பீட்டை விட 0.25% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1973/2018/இ1)**

நகரமன்றத் திர்மானம்
எண்.2971
அனுமதிக்கப்படுகிறது

xxxஒம்./ ஆர்.எஸ்.வெங்கடாசலம்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.